# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025
கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**
Publisher

**MR P. JAYAKRISHNAN**
Editorial Board Members

**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மௌ.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2



**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**



**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
# *Theological principles of Thirunavukkarasar*

**முனைவர்**
**ச.வைத்தீஸ்வரன்**
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி,
திருவண்ணாமலை.

**ஆய்வுச் சுருக்கம்:**
சைவ சமய நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை இறைநெறிக் கொள்கைகளில் திருநாவுக்கரசர் பின்பற்றியுள்ள சரியை நெறி குறித்த பனுவல்களையும், இந்நெறிக்கொள்கைகளால் திருநாவுக்கரசர் பெற்ற இறையுணர்வினை இவ்வுலகத்தாரும் உணர்ந்து உவப்பிலா ஆனந்தம் அடையும் வகையில் பாடல்களைப் படைத்து இன்ப வாழ்விற்கு எவ்வாறு நல்வழி காட்டியுள்ளார் என்பதையும் இறை வழிபாட்டு முறைகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:**
அட்டகா மலர்கள், பிரணவ மலர், இறைநெறி, திருமஞ்சன நீர், சரியை நெறி,சைவம்

***Keywords:Abstract;***
*The four types of Shaivism are: Sariya, Kriya, Yoga, and Jnana. Regarding the correctness of the principles of theology followed by Thirunavukkarasar The knowledge of the gods and the divine consciousness that Thirunavukkarasar attained through these principles Sing songs in a way that everyone in this world can understand and experience unsurpassed joy. God created and showed us how He has shown us the path to a happy life. This article also examines the methods of worship.*

***Keywords: Attakaflowers, pirava flowers, iraiweri,sariyaiweri, saivam***

**முன்னுரை:**

தமிழ்நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயக்குரவர்கள் நால்வருள் நாவுக்கரசர் பெருமானுக்குத் தனிச்சிறப்பு உண்டு. அவர் தமிழகம் முழுவதும் **பயணம் செய்து சைவ நெறி தழைத்து வளரப்பாடுபட்ட பெருந்தகையாளர்.** சமயத் தொண்டினை சமுதாயத் தொண்டாக மாற்றிய மாட்சிமையாளர். துணி, கனிவு, தெளிவு ஆகிய முறையில் தம்முடைய வாழ்வை அமைத்துக்கொண்டு ' **என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்று வாழ்ந்தவர். உலகில் தோன்றிய உயிர்கள் பல பந்தங்களை எல்லாம் அறுத்து வீடுபேறு அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளை சைவ ஆகமங்களில் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்நால்வகை நெறிகளும் சைவ சமயத்தின் நான்கு தூண்களாகவும் மதிக்கப்படுகின்றன. இந்நான்கு சைவ நெறிகளும் இறைவனை அடைய பின்பற்ற வேண்டிய வாழ்வுக்கு நல்வழிகாட்டும் நெறிகளாகும் என்று சைவ சமயக்குரவர்கள் கூறுகிறார்கள். சைவ சமய குரவர் நால்வருள் சரியை (தாசமார்க்கம் எனப்படும் தொண்டு) நெறியால் இறைவனை வழிபட்டவர் திருநாவுக்கரசர். அவர் பின்பற்றிய இறைநெறிக் கொள்கைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிறப்பும் இளமையும்:**

சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் நடுவில் உள்ள திருவாமூர் என்னும் சிற்றூரில் சைவ வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார், மாதினியார் ஆகிய இருவருக்கும் மகனாக நாவுக்கரசர் தோன்றினார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். இவர் உரிய பருவத்தில் எல்லாக் கலைகளையும் திறம்படக் கற்றுத் தேர்ந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் இவரது தந்தை புகழனார் உடல் நலம் குன்றி உயிர் நீத்தார். மாதினியாரும் புகழனாரோடு தம்முயிர் விடுத்து விண்ணுலகம் அடைந்தார். தந்தையையும், தாயையும் பிரிந்த மருள்நீக்கியார் தமது தமக்கை திலகவதியாருடன் பெரியோர்கள் தேற்றஒருவாறு மனந்தேறினார். இந்நிலையில் கலப்பகையாரும் வடநாட்டுப் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார். இச்செய்தியைச் செவி மடுத்த திலகவதியார்,

> **"எந்தையு மெம்மனையுமவர்க்கெனைக் கொடுக்க விசைந்தார்கள்**
> **அந்த முறை யாவர்க்கே யுரியது நானாதலினால்**
> **இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பேன்"** [1]

என்று தம்முயிரை விடத்துணிந்தார்.

**தமக்கையின் தவநிலை:**

மருள் நீக்கியார், தமக்கையார் காலில் வீழ்ந்து "தாயும் தந்தையும் இறந்த பின்னர் எனக்குற்ற தாயும் தந்தையும் எல்லாமுமாய்த் தாங்கள் இருந்தீர்கள் என்பதால் உயிர் வாழ்ந்தேன். தாங்கள் என்னை விடுத்து உயிர் நீப்பதாயின் தங்கட்கு முன்பாக யானும் உயிர் விடுவேன்" என்று மொழிந்தார். '**தம்பியார் உளராக வேண்டும்**' என்ற கருணையினால் திலகவதியார் மணவாழ்வை மறந்து அனைத்துயிர்க்கும் அருள்வேணும் மனத்தவம் மேற்கொண்டார்.

**மருணீக்கியார் சமணம் சார்ந்து தருமசேனராதல்:**

மருணீக்கியார் உலக வாழ்வின் நிலையாமையைக்கண்டு, எல்லா உயிர்க்கும் துன்பம் நீக்கவும் இன்பம் விளையும், நேர்தற்குரிய பேரறங்களைச் செய்து வரலானார். நில்லாத உலக இயல்பு கண்டு '**நிலையாத இவ்வுலக வாழ்க்கையில்சிக்கி உழலேன்**' [2] என்று துறவு நெறியைச்சார்ந்தார். சமயங்கள் பலவற்றின் நன்னெறிகளைத் தெரிந்துக்கொள்ள எண்ணினார். சிவபெருமானின் திருவருள் கைவரப்பெறாமையால் 'கொல்லாமை' என்னும் நல்லறப் போர்வையில் மறைந்துறையும் சமண சமயத்தில் சேரக் கருதினார். திலகவதியாரை விடுத்துப் பாடலிபுத்திரம் சென்று, சமணர்கள் வாழும் பள்ளியை அடைந்தார். ஆங்குள்ள சமணர்கள் மருணீக்கியார் மனநிலை அறிந்து சமண சமயமே வீடுபேற்றை அளிக்கும் என்று கூறி அவரைத் தங்கள் சமயத்தில் ஈடுபடுத்த முயன்றார். அவர்கள் கூறிய கருத்துக்களில் வயப்பட்ட மருணீக்கியார் சமண சமயத்தில் உள்ள அரிய நூல்கள் அனைத்தையும் கற்றுத்தேர்ந்தார். சமணர்கள் அவருக்கு '**தருமசேனர்**' என்ற பட்டம் சூட்டி, அவரை குருவாகக் கொண்டார்கள். புத்தர்களை வாதில் சென்று சமண சமயத்தை வளர்த்து வந்தார்.

**திலகவதியாரின் வேண்டுகோள்:**

திருநாவுக்கரசரின் தமக்கை திலகவதியார் தனது தம்பி தீவினைத் தொடர்பால் புறச்சமயம் சேர்ந்ததை எண்ணி, தவம் பூண்டு சிவனை வேண்டினார். சிவபெருமான் கனவில் தோன்றி, உன் மனக்கவலையை ஒழிப்பாயாக; உன் தம்பி முன்னமே முனியாகி நம்மை அடையத் தவஞ்செய்தவன்; அவனிடம் சூலைநோய் செலுத்தி அவனை ஆண்டருள்வோம் என்று இவரது தவத்திற்கும் சிவபெருமானும் அருள் செய்தார்.

**சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளல்:**

சிவபெருமான் அருளால் மருள்நீக்கியாரின் வயிற்றில் சூலை நோய் சென்று பற்றியது. சமண சமயத்தில் கற்ற மந்திரங்கள் பயனற்றுப் போயின. நஞ்சு தலைக்கேறியது போல் நடுநடுங்கி மயங்கி விழுந்தார். சமணர்கள் குண்டிகை நீரைமந்தரித்து அவரைக் குடிக்கச் செய்தனர். பீலி கொண்டு தடவினர். தம்மால் இயன்றஅளவு செய்து பார்த்தனர். நோய் மேலும் முருகியதேயன்றிக் குறையவில்லை. 'இது நம்மாற் போக்கரிது' என்று சமணர்கள் கைவிட்டுச் சென்றனர். தரும சேனருக்குத் தமக்கையார் நினைவு எழ, அடிசில் சமைப்பவனை அவர்பால் நிலைமையைச் சொல்லி வரும்படி விடுத்தார். திலகவதியார் 'நன்றறியார் அமன் பாழி நன்றுகிலேன்' எனக்கூறி அவனை அனுப்பிவிட்டார்.

**சமணத்தை விடுத்துச் சைவம் சார்தல்:**

ஈசன் அருள் கூடுதலால் மருணீக்கியார் பாயும் குண்டிகையும் பாழியும் ஒழிய, சூலை நோய் உடன் தொடர, நள்ளிரவில் பிறர் காணாத வகையில் திருவதிகை சென்று, திலகவதியார் இருந்த திருமடந்தை அடைந்தார். உய்யும் நெறி உரைத்து அருளுமாறு அவர்தம் திருவடியில் வீழ்ந்து வேண்டினார். 'பரசமயப்படுகுழியில் விழுந்ததால் துயலுழந்தீர்; எழுந்திரீர்; இது கற்றைவேணியர் அருளே; சிவபெருமானை வணங்கிப் பணி செய்வீராக எனத் திலகவதியார் பணிந்தார். திருவதிகைக் கோயிலுள் புகுந்து சிவபெருமானுக்குத்தொண்டு செய்யும் தகுதியை மருணீக்கியார் பெறுமாறு திருவைந்தெழுத்தை ஓதி திருவாளன் திருநீறு திலகவதியார் அளித்தார். மருணீக்கியாரும் உளவாறு அணிந்தார். திருப்பள்ளியெழுச்சிக் காலமாகிய விடியற்காலையில் தமக்கையாருடன் மருணீக்கியார் திருக்கோயில் சென்று வணங்கிய நிலையில் இறைவன் அருளால் அவருக்குத் தமிழ் மாலைகள் பாடிப் போற்றும் உணர்வு உண்டாயிற்று. தம்முடைய சூலை நோயை நீக்கும் பொருட்டு அதிகைப் பெருமானனை 'கூற்றாயினவாறு விலக்கலீர்' எனத் தொடங்கும் திருப்பகம் பாடிப்போற்றினார். அவர் தம் வயிற்றில் வருந்திய சூலைநோய் நீங்கியது. அவ்வளவில் யாவரும் வியப்ப,

> **"பாவுற்றவர் செந்தமிழின் சொல் வளப்**
> **பதிகத்தொடை பாடிய பான்மையினால்**
> **நாவுக்கர சென்றுல கேழினுநின்**
> **னன்னாம நயப்புற மன்னுக"** [3]

என்று வான்மொழி எழுந்தது. அன்று முதல் அவருக்குத் திருநாவுக்கரசர் என்ற பெயர் வழங்கலாயிற்று. சிவச்சின்னங்கள் அணிந்து உழவாரப்படை ஏந்தி முக்கரணங்களாலும் பக்தி செய்ய முற்பட்டார்.

**சமணர் செய்த வஞ்சனைகளைவென்று மீளல்:**

திருநாவுக்கரசர் மீண்டும் சைவரான செய்தியைக் கேட்ட சமணர்கள் 'நம்பெருஞ் சமயம் வீழ்ந்தது' என்று மருண்டனர். தருமசேனர் சூலைநோய் எனப் பொய் கூறிச்சைவம் சார்ந்து நம் சமயத்தை அழித்தார் என்று அரசனிடம் முறையிட்டனர். அரசன் வெகுண்டெழுந்து நாவுக்கரசரை அழைத்து வர, அமைச்சர்களுக்கு ஆணையிட்டான். நாவுக்கரசர் தம்மை அழைக்க வந்த அமைச்சர்களிடம் **"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்"**[4] எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகப்பதிகம் பாடி அரசனைக் காண்பதற்கு வர மறுத்தார். அமைச்சர்கள் அவர் திருவடிகளில் வீழ்ந்து வந்தருளவேண்டும் என்று வேண்ட நாவரசர் ஈண்டு வரும் வினைகட்கு எம்பிரான் உள்ளன் என்னும் உறுதியோடு நாட்டசரன் முன் அடைந்தார். அரசன் சமணர்கள் கூறியபடி திருநாவுக்கரசரை நீற்றரையில் இடுமாறு பணித்தான். ஏவலர் அவரை நீற்றறையில் இட்டுத் தாளிட்டனர். நாவுக்கரசர் இறைவன் தாள் நீழலைத் தலைக்கொண்டு

> **"மாசில் வீணையும் மாலை மதியமும்"** [5]

எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைப்பதிகம் பாடி இனிதிருந்தார். ஏழு நாட்கள் சென்றபின் சமணர்கள் நீற்றறையைத்திறந்து பார்த்தனர். எவ்வித ஊனமுமின்றி நாவுக்கரசர்

வீற்றிருந்ததைக்கண்டு அதிசயித்தனர். சமணர் சமயத்தில் இருக்கும்போது கற்ற மந்திரத்தால் நாவுக்கரசர் உயிர் பிழைத்தார் என நினைத்த சமணர்கள், நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்து அவரை உண்ணச் செய்தனர். **"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு"** [6] என்ற உறுதியுடன் அவர் அதை உண்டு எவ்விதத் தீங்குமின்றி இருந்தார். இந்நிகழ்ச்சியைத் திருநனி பள்ளிப்பதிகத்தில்,

**"வஞ்சனப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர் தந்த**
**நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே"** [7]

என நினைவு கூர்ந்துள்ளார்.

**"மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு கில்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை"** [8]

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக நாவுக்கரசர் விளங்கினார். சமணர்கள் அரசனிடம் சென்று இறைவனுக்கு நஞ்சும் அமுதாயிற்று. இவன் பிழைத்தால் எங்கள் உயிரும் நும் அரசாட்சியும் அழிவது திண்ணம்; உமது யானையை அவன் மீது ஏவி மிதிக்கச் செய்து சொல்லுக' என்று வேண்டினார். அரசனும் அவர்கள் வஞ்சனைக்கு இணங்கினான். நாவுக்கரசர் மீது யானை ஏவப்பட்டது. அவர் சிறிதும் அஞ்சாது சிவன் கழலே சிந்தித்துச்

**"சுண்ணவென் சந்தனச் சாந்தும்"** [9]

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி அருளினார். கூற்றென கடுகி வந்த மதயானை அவரை மும்முறை வலம் வந்து வணங்கித் தன்னை ஏவிய பாகரையும் சமணரையும் மிதித்துக் கொன்றது. யானையிடமிருந்து தப்பிப் பிழைக்க சமணர்கள் நாவுக்கரசரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் பாய்ச்சும்படி கூறவே அரசனது ஏவலரும் அவ்வாறே செய்தனர். உண்மைத் தொண்டின் உறைப்புடைய நாவுக்கரசர் எம்பரிசாயினும் ஆகுக என்று எண்ணி **"சொற்றுணை வேதியன்"** [10] எனத் தொடங்கும் நமச்சியவாயப்பதிகம் பாடினார். பாடிய அளவில் கல் கடலில் மிதந்தது. கயிறு அறுந்தது வருணன் தன் அலைக்கைகளால் நாவுக்கரசரைத் தாங்கி அவரைத்திருப்பாதிரிப்புலியூர் அருகே கரைசேர்த்தன. இந்நிகழ்ச்சியை திருநீலக்குடிப் பதிகத்தில்,

**"கல்லி னோடெனைப் பட்டிய மண்கையர்**
**ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்**
**நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்**
**நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே"** [11]

என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. கரையேறிய நாவுக்கரசர் திருப்பாதிரிப் புலியூர்த் தோன்றாத் துணை நாதரை, **"ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்"** [12] எனத் தொடங்கும் பதிகத்தால் போற்றி பரவினார்.

**குணபர ஈச்சரம்:**

திருமாணிக்குழி, திருத்திணை நகர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவதிகையை அடைந்தார். அங்கேயே சில நாள் தங்கி உழவாரப் பணி செய்து வந்தார். பல்லவ மன்னன் நாவுக்கரசர்க்குத் தான் செய்த கொடுமைகளையும், சமணர் செய்த சூழ்ச்சிகளையும் உணர்ந்து திருவதிகை அடைந்தான். நாவுக்கரசர் திருவடிகளில்பணிந்து திருநீறு அணிந்து சைவ சமயத்திற்கு மாறினான். "பாடலிபுத்திரத்தில் இருந்த பள்ளிகளையும், பாழிகளையும், இடித்துக் கொணர்ந்து திருவதிகையில் **குணபர ஈச்சுரம்** என்ற பெயரில் சிவபெருமானுக்குத் திருக்கோயில் எழுப்பித்தான்." [13]

**இடபக்குறி சூலக்குறி பொறிக்கப்பெற்றமை:**

நாவுக்கரசர் திருத்தலந்தோறும் சென்று திருப்பதிகம் பாடித்திருத் தொண்டு செய்ய எண்ணினார். திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோயிலூர் முதலான

தலங்கட்குச்சென்று திருப்பதிகம்பாடித் திருப் பொண்ணாடகம் அடைந்தார். அங்கு திருத்தூங்கானை மாடத்து இறைவனைப் பணிந்து,

**"பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"** [14]

என்று வேண்டித் தம் உடலில் இடபக்குறியும், சூலக்குறியும் பொறித்துத் திருவடி நீற்றுப்பூச்சும் செய்தருள வேண்டினார். சிவபூதம் ஒன்று வந்து அவர் தோள்களில் இடபக்குறியும், சூலக்குறியும் பொறித்தது.

**தில்லைக் கூத்தனை வணங்குதல்:**

பொண்ணாகடத்தில் இருந்து திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலான தில்லையை அடைந்தார். தலங்களுக்குச்சென்று வெள்ளாற்றங்கரை வழியாகத் மேலைக் கோபுர வாயில் வழியாகத் திருக்கோயில் சென்று கூத்த பிரானின் பேரின்பப்பேராடல் கண்டு தொழுதார். அம்பலவாணரின் திருவருட்குறிப்பு என்று வந்தாய், ன்பதைப் போன்று இருந்த தன்மையைக்குறிப்பிட்டு, கருநட்ட கண்டனன் எனத்தொடங்கும் திரு விருத்தப்பதிகம் பாடிப்பரவினார்." திருநேரிசை, திருக்குறுந்தொகைப் பதிகங்கள் பாடியும் இறைவனை வணங்கினார். தில்லையில் இருந்தவாறே திருவேட்களம், திருக்கழிப்பாளை முதலான தலங்கட்கும் சென்று வந்தார்.

**திருநாவுக்கரசர் பின்பற்றிய சரியை நெறி:**

சாரீரம் என்று மனித உடலைக் குறிக்கும் இச்சொல் வடமொழியில் இருந்து வந்ததால் சரியை என்று அழைக்கப்படுகின்றது. இதனைத் தொண்டுநெறி என்றும் அறிஞர்கள் கூறுவர். கோயிலை வலம் வருதல், கோயிலுக்குப் பூமாலை தொடுத்தளித்தல், கோயிலைத் துப்புரவு செய்தல், விளக்கிடுதல், திருமஞ்சன நீர் எடுத்தல், பசுமடம் அமைத்தல், ஆடிப்பாடி வழிபடுதல் போன்றவை சரியை நெறியில் அடங்கும். திருநாவுக்கரசரின் தாசமார்க்கம் சரியை நெறியைச் சார்ந்ததாகும்.

**சரியை நெறியின் பயன்:**

இறைவனுக்குத் தொண்டு செய்யும் பணிகட்கு என்ன பலன் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்போ, ஏக்கமோ இல்லை. இருப்பினும் எச்செயல் செயினும் அதற்குரிய சொற்பலன் வந்தே தீரும் எனும் விதிப்படி சரியை நெறிக்கண் தொண்டு புரிவார்க்குப் பலன் உண்டு. என்னென்ன பலன்கள் எல்லாம் உண்டாகும் என்பதைத் திருநாவுக்கரசர்,

**"தேசத்தார் பரவி யேத்தும்**
**திருவையாறு அமர்ந்த தேனை**
**வாசத்தால் வணங்க வல்லார்**
**வல்வினை, மாயு மன்றே"**[15]

என்றும் இறைவனின் திருப்பாத மலர்களை அன்புடன் தொழ வல்லவர் வல்வினையில் இருந்து நீங்கப் பெறுவர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும்,

**"அட்டகா மலர்கள் கொண்டே**
**ஆனஞ்சும் ஆட்ட ஆடிச்**
**சிட்டாய் அருள்கள் செய்வார்**
**திருச்சோற்றுத் துறையனாரே"** [16]

பெருமானை அட்ட மலர்களாகிய புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம் (குவளை), பாதிரி, அலரி, செந்தாமரை ஆகிய மலர்கள் கொண்டு தூவிப்போற்றினால் சிவபெருமான் அருள்புரிவான் என்று சரியை நெறியின் பயன்பற்றி திருநாவுக்கரசர் எடுத்துரைக்கின்றார்.

**இறைவனை அடையும் முறைகள்:**

திருக்கோயிலைத் திருவலகு கொண்டு சுத்தம் செய்தவர் பெற்ற இன்பத்தின் அளவில் பத்து மடங்கு மெழுகினவர்க்கு வாய்க்கும். மலர்கள் தொடுத்து மாலையாக்கி இறைவனுக்கே

அணிவித்தால் சிவலோகம் செல்லலாம். கோயில் திருவிளக்கு இட்டவர் பெறும் பேறு சொல்லில் அடங்காத நிலையான தவம் ஆகும். அறியாமையில் சிக்கி, ஆணவத்தில் உழன்று உண்மை காணாமல் தடுமாறும் என் நெஞ்சமே! இங்கே வா! நிலை பேறாக இன்ப வாழ்வு உனக்கு வேண்டுமென்றால் நீநித்தமும் திருக்குளத்தில் நீராடி எம்பெருமானுடைய கோயிலுக்குச்செல். வைகறை புலர்வதற்கு முன்பு கோயிலைத் திருவலகிட்டு கூட்டிப் பெருக்கித் தூய்மை செய் திருமெழுக்கும் இடு, நறுமலர் மாலைகளைத் தொடுத்து இறைவனுக்கு சார்த்து, இனிய பாசுரங்களால் அவர் புகழப்பாடி, தலையாரக் கும்பிட்டு பன்முறை வணங்கிக் கூத்தும் ஆடும். சங்கரா போற்றி என்னும் அலைபுனல் நிறைந்த செஞ்சடையை உடைய ‘‘உலக முதல்வா‘‘ என்றும் ‘‘ஆரூரா‘‘ என்றும் வாய்விட்டு அலறு. இதுவே நீ உய்யும் நெறி என்று திருநாவுக்கரசர் கூறுகிறார். இதனை,

> **“நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா!**
> **நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
> **புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்**
> **பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
> **தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்**
> **சங்கரா சயபோற்றி போற்றி! என்றும்**
> **அலைபுனல் சேர்செஞ்சடையெம் ஆதி என்றும்**
> **ஆரூரா என்றென்றே அலறா நில்லே”** [17]

என்ற பாடலாலும் விளக்கியுள்ளார்.

**பொதிசோறு பெற்றது:**

பழையாறை விடுத்து திருவெறும்பியூர், திருஆனைக்கா, திருக்கற்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பராய்த்துறை, முதலிய தலங்கட்குச்சென்று வணங்கிய பின் திருப்பைஞ்ஞீலி செல்லும் வேட்கைக் கொண்டார். செல்லும் வழியில் நாவுக்கரசர் வழி நடந்த களைப்பு, பசி, நீர் வேட்கை இவற்றால் வருந்தினாலும் மனத்தின்மையுடன் பைஞ்ஞீலியை நோக்கி நடந்தார். அடியவரின் வருத்தம் காணப்பொறாது சிவனார் அவர் வரும் வழியில் சோலையும் குளமும் உண்டாக்கியதோடு, அந்தணர் வடிவம் கொண்டு பொதி சோற்றுடன் வீற்றிருந்தார். காளத்தியில் இருந்த நாவுக்கரசருக்குத் திருக் கயிலையில் இறைவர் எழுந்தருளியுள்ள பெருங்கோலத்தை நேரிற் சென்று காண வேண்டும் என்ற பெருவிருப்பு விளைந்தது.

**கயிலைப் பயணம்:**

காளத்தியில் இருந்து புறப்பட்டுப் பெருமலைகளையும், கான்யாறு களையம் அவை தொடர்ந்த நாடுகளையும் கடந்து திருப்பருபதத்தை அடைந்து பதிகம் பாடி வழிபட்டார். தெலுங்கு, கன்னடம், மாளவம், இலாடம் முதலிய நாடுகளைக் கடந்து வந்தவர்களை அங்கேயே விடுத்துத் தனியே காடு, மலை, மேடு, பாலைவனங்களின் வழியாக இரவு பகலாக நடக்கத்தொடங்கினார். கிழங்கு, இலை, கனி முதலியவற்றை உண்ணு தலையும் விடுத்தார். கால்கள் பரடுவரை தேய்ந்தன. கயிலையைக்காணும் உள்ளத்துறுதி வலுப்பெற்றது. கைகளால் தாவித்தாவிச்சென்றதனால் கைகளும் மணிக்கட்டுகளும் தேய்ந்தன. மார்பினால் உந்திச்சென்றார். மார்பிலும் தசை நைந்து எலும்புகள் முறிந்தன. உடலும் தேயலாயிற்று. மேலும் செல்ல வழியின்றி ஒரிடத்தில் செயலற்றுத் தங்கினார்.

**திருக்கயிலைக்காட்சி:**

நாவுக்கரசர் இவ்வுலகத்தில் இருந்து மேலும் தீந்தமிழ்ப் பாடல்கள் பாட வேண்டும் என்னும் திருவுள்ளத்தினால், அவர் கயிலைக் காட்சியைக் காண இறைவர் அருள் செய்யவில்லை. பொய்கை ஒன்றைத்தோற்றுவித்து இறவைர் தாமே ஒரு முனிவராக உருக்கொண்டு,

நாவுக்கரசரின் நேர்நின்று நோக்கினர். அவரும் எதிர்நோக்க, அங்கம் சிதைய இவ்வருங்கானில் வந்தது எது' என்று முனிவர் வினவினார். காயிலைக்காட்சி காணவந்த தம் நோக்கத்தை நாவுக்கரசர் தெரிவித்தார். கயிலை மாமலை மானிடர் சென்றடைவதற்கு எளிதோ அமரரும் அணுகுவதற்கு அரியது; நீர் இம்மட்டில் மீள்வதே கடன்' என்று முனிவர் அருளியது கேட்டு,

**"ஆளு நாயகன் கயிலையி லிருக்கை கண்டலல்லால்**
**மாளுமிவ்வுடல் கொண்டுமீ ளேன்"** [18]

என்று நாவுக்கரசர் மறுத்துரைத்தார். முனிவராய் வந்த இறைவர் வானில்மறைந்து, ஓங்கு நாவினுக்கரசனே, எழுந்திரு' என்று முற்றும் நீங்கிய திருமேனியுடன் நாவுக்கரசர் எழுந்திருந்து, அண்ணலே! கயிலையில் இருந்த நின் திருக்கோலத்தை நான் கண்ணினாற்காண அருள்புரி' என்று வேண்டினார். இறைவர் மீண்டும் வான் மொழியாக, 'இப்பொய்கையுள் மூழ்கித் திருவையாற்றில் நாம் கயிலையில் இருக்கும் காட்சியைக் காண்க' என்று பணித்தார். நாவுக்கரசர் திருவைந்தெழுத்தைச் சொல்லிப் பொய்கையுள் மூழ்கினார். திருவையாற்றில் உள்ள பொய்கையில் எழுந்தார். திருவையாற்றில் உள்ள இயங்கிய நிலையில் உயிர்கள் அனைத்தும் சிவமும் சக்தியுமாகி அவருக்கு காட்சியளித்தன. திருக்கோயிலின் முன் அவர் வந்தபோது அக்கோயிலே கயிலை
மலையாகக்காட்சியளித்தது. மறைகள் முழங்கின. திருமால், பிரம்மன், இந்திரன் முதலானோர் போற்ற சித்தர், வித்யாதரர்களுடன் மாதவர் முனிவர் வணங்க இறைவன் இறைவியோடு எழுந்தருளியிருக்கும் அருட்காட்சி கண்டு ஆனந்தம் அடைந்தார். சிறிது நேரத்தில் கயிலைக்காட்சியை இறைவன் மறைத்து அருளினான். நாவுக்கரசர் வருந்தி இதுவும் இறைவன் திருவருளே எனத் தெளிந்து,

**"மாதர்ப் பிறைக் கண்ணியானன"** [19]

என்ற திருப்பதிகம் பாடித்தொழுதார். அத்தலத்தில் சிலநாள் தங்கி உழவாரப் பணி செய்தார்.

**இறை வழிபாட்டின் நன்மைகள்:**

இறைவனை காலை, மதியம், அந்தி ஆகிய மூன்று காலங்களிலும் வழிபட வேண்டும். அவ்வழிபாட்டை வன்னி இலைகளைக் கொண்டு செய்தல் சிறந்தது. பிரணவ மலர்களாகிய கொன்றை மலர்களைக் கொண்டும் எட்டு விதமான மலர்களைக் கொண்டுதொகுக்கப்பட்ட மாலையை இறைவனின் பாதத்தில் தூவி போற்றுதல் என்பது ஆகமங்களை கற்றுணர்ந்தோர் செய்யும் செயலாகும். இதனை அறியாதவர்கள் பிறமலர்களைக் கொண்டும் வழிபடுவர்களுக்கு அதற்குத் தக்க வகையில் அருள்புரிவான் என்பதை,

**"புலரும் போதும் இலாப்பட்ட பொற்சுடர்**
**மலரும் போதுக ளாற்பணி யச்சிலர்**
**இலரும் போதும் இலாததும் அன்றியும்**
**அலரும் போதும் அணியும் ஐயாறரே"** [20]

என்று ஐயாற்றில் வீற்றிருக்கும் இறைவனைப் பற்றியும் இறைவழிபாட்டினால் ஏற்படும் நன்மைகள் பற்றி திருநாவுக்கரசர் கூறியுள்ளது நோக்குதற்குரியதாகும்.

**முடிவுரை:**

பரம்பொருள் என்பது இவ்வுலகில் எங்கும் நிறைந்துள்ளது. அப்பரம்பொருள் இவ்வுலகில் உள்ள உயிர்களின் வடிவிலும் விளங்குகிறது. உயிர்களுக்குச் செய்யும்தொண்டே இறைவனுக்குச் செய்வதாகும். ஆகையால் அனைத்துமாய் நின்ற இறைவனை அகத்தில் உணர்ந்து பேரறிவுப் பொருளாக விளங்கும் இறைவனை நமது அறியாமை இருள் நீங்க உள்ளத்தில் வைத்து வழிபட வேண்டும் என்றும் உடலை ஓம்பி, மனதை ஒருமைப்படுத்தி, இறைவனை சிந்தனையிலிருத்தி காலை, மதியம், அந்தி ஆகிய மூன்றுவேளைகளிலும் கொன்றை மலர்களையும் எட்டு விதமான மலர்களால் ஆன மாலையை அணிவித்தும் வழிபட்டு வந்தால் இறவாப் புகழுடன் நூற்றாண்டுகள் கடந்து வாழலாம் என்றும் மக்களின் நல்வாழ்விற்கான

இறையின்பத்தை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது திருநாவுக்கரசர் பின்பற்றிய இறைநெறிக் கொள்கைகள் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**அடிக்குறிப்பு**

1. பெரியபுராணம், திருநாவுக்கரசர்,பா.32
2. மேலது, பா.33
3. மேலது, பா.74
4. திருநாவுக்கரசர் தேவாரம், 4:1:1
5. . மேலது, 5:90
6. பெரியபுராணம், திருநாவுக்கரசர், பா.104
7. நாவுக்கரசர் தேவாரம், 4:70:5
8. திருக்குறள். 224
9. நாவுக்கரசர் தேவாரம், 4:2:1
10. மேலது, 4:11
11. மேலது,, 1:72:7
12. மேலது,, 4:94
13. பெரியபுராணம், திருநாவுக்கரசர், பா.147
14. திருநாவுக்கரசர் தேவாரம், பா:109:1,2,3
15. மேலது, 4:39:4
16. மேலது, 4:41:2
17. மேலது, 6:31:3
18. பெரியபுராணம், திருநாவுக்கரசர், பா.366
19. திருநாவுக்கரசர் தேவாரம், 4:3
20. மேலது, 5:27:6

**துணைநூற்பட்டியல்**

1.இரத்தினசபாபதி,வை., - திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மு.ப.1984.

2. நடேசக்கவுண்டர், கு., - அப்பர் வரலாறும் ஆராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, சென்னை மு.ப .1972.

3. நடராசன், புலவர்.பி.ரா., - திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம்,
பகுதி , 1,2,3
உமா பதிப்பகம்,
மண்ணடி, சென்னை -1.
மு.ப.2003.

***Sub-Catalogue***

1.Rathinasabhapathy, V., - Thirunavukkarasar A Study,
Madras University,
Chennai, F.E.1984.

2. Nadesakondar, K., - Upper History and Research,
Thevarath Athapriyavum,
Kazakh Publication,
Chennai, F.E.1972.

3. Natarasan, Pulavar.P.Ra., - Thirunavukkarasar Swamigal Thevaram,
Parts, 1,2,3
Uma Publishing House,
Mannadi, Chennai -1.
F.E.2003.

அரண் International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com